**ஜூலை – 18**

# தேசியச் செய்திகள்

## சுகாதாரத்திற்கான சிந்தனை - டிஜிட்டல் சுகாதார பரப்புரை

- இந்திய மருந்து உற்பத்தியாளர்கள் சங்கம் (The Organisation of Pharmaceutical Producers of India – OPPI ) #ThinkForHealth என்ற டிஜிட்டல் சுகாதாரப் பரப்புரையை புதுதில்லியில் நடைபெற்ற தனது வருடாந்திர மாநாட்டில் ஆரம்பித்துள்ளது.
- #ThinkForHealth என்ற முயற்சி தெலுங்கானா மாநில அரசின் ஒத்துழைப்புடன் துவங்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் சுகாதாரத் துறையை மேம்படுத்தும் நோக்கில் பெண்கள் மற்றும் குழந்தை நலம், மனநலம், தொற்றா நோய்கள் மற்றும் சுகாதாரத் தொழில்நுட்பம் ஆகியவற்றுக்கான அணுகுதலை மேம்படுத்துவதற்கான திட்டங்களுக்குத் தேசிய அளவிலான பரப்புரை அழைப்பு விடுக்கின்றது.
- இந்திய மருந்து உற்பத்தியாளர்கள் சங்கத்தின் வருடாந்திர மாநாடு மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சகம், மத்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் மற்றும் இன்வெஸ்ட் இந்தியா ஆகியவற்றுடன் இணைந்து நடத்தப்படுகிறது.

## சுரங்கங்கள் மற்றும் தனிமங்களுக்கான தேசியக் கூட்டம்

- சுரங்கங்கள் மற்றும் தனிமங்களுக்கான 4வது தேசியக் கூட்டம் இந்தூரில் 13 ஜூலை, 2018 அன்று நடைபெற்றது.
- இவ்விழாவில் வெவ்வேறு மாநிலங்களால் 2018-19 நிதி ஆண்டில் (FY 2018-19) ஏலம் விடுவதற்காக வரிசைப்படுத்தப்பட்ட வெவ்வேறு தொகுதிகள் வெளியிடப்பட்டன.
- தனிமங்களின் ஏலத்தினை செயல்படுத்துவதில் சிறப்பான செயல்பாட்டிற்காக சத்தீஸ்கர் எல்லாப் பிரிவுகளிலும் விருதுகளை வென்றுள்ளது.

## சுவச் சர்வேக்ச கிராமின் 2018

- குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகம் ‘சுவச் சர்வேக்ச கிராமின் 2018’ எனும் கிராமப்புற தூய்மைத் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தில் தரமான மற்றும் அளவுகள் அடிப்படையிலான மதிப்பீட்டில் அனைத்து மாநிலங்கள் மற்றும் மாவட்டங்கள் தரம் பிரிக்கப்படும்.
- இந்த தரவரிசை ஒரு விரிவான தூய்மை அளவுருக்களை கணக்கில் கொள்ளும்.



- குடிமக்களின் கருத்து மற்றும் நேரடியாக கவனிக்கப்பட்ட பொதுவான பகுதிகள் ஆகியவற்றின் கலவையும் இந்த தரவரிசையில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.
- குடிமக்களிடமிருந்து தகவல்களை சேகரிக்க ஒரு கைபேசி செயலி மற்றும் நேரடியான இணையதள நடைமுறையும் அமைக்கப்படும்.

# சர்வதேசச் செய்திகள்

## பாலின மாற்ற சட்டம் - போர்ச்சுக்கல்

- "அடையாள மாற்றம்" (Identity disruption) காட்டும் மருத்துவ அறிக்கை இல்லாமல் குடிமக்கள் தமது 16 வயதிலிருந்து தங்களது பாலினம் மற்றும் பெயரினை மாற்றிக் கொள்வதனை அனுமதிக்கும் சட்டத்திற்கு போர்ச்சுக்கல் பாராளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.
- மூன்றாம் நபர் பாதுகாப்பு மற்றும் அடையாள மாற்றத்துக்கான சிகிச்சை ஆகியவை இன்றி திருநங்கை அடையாளத்திற்கான சுய நிர்ணய உரிமையை வழங்கிய ஐரோப்பிய நாடுகளான டென்மார்க், மால்டா, ஸ்வீடன், அயர்லாந்து மற்றும் நார்வே ஆகியவற்றின் வரிசையில் ஆறாவது நாடாக போர்ச்சுக்கல் இணைந்துள்ளது.
- ஆண் மற்றும் பெண் இனப்பெருக்க உறுப்புகளுடன் பிறந்த குழந்தைகளின் மீதான பாலின அறுவை சிகிச்சைக்கும் இச்சட்டம் தடை விதிக்கிறது. எனவே, பிற்காலத்தில் அவர்களது பாலினத்தை அவர்களால் தேர்வு செய்ய முடியும்.

# மாநிலச் செய்திகள்

## தனிநபர் வருவாய் வசூல்

- GST-ன் கீழ் தனிநபர் வருவாய் வசூலில் ஹரியானா மற்ற மாநிலங்களிடையே முதலிடத்தினைப் பெற்றுள்ளது. மேலும் நாட்டில் மின்னணு வழி ரசீதுகளை உருவாக்குவதில் 4வது இடத்தில் உள்ளது.

**Per capita GST revenue of states**

| State | Monthly collection | Population | Per capita revenue |
|---|---|---|---|
| Haryana | ₹4,758 cr | 2.54 cr | ₹1,876.97 |
| Uttarakhand | ₹1,449 cr | 1.01 cr | ₹1,436.21 |
| Maharashtra | ₹13,101 cr | 11.24 cr | ₹1,165.85 |
| Karnataka | ₹5,984 cr | 6.11 cr | ₹979.52 |
| Gujarat | ₹5,623 cr | 6.04 cr | ₹930.38 |
| Punjab | ₹1,266 cr | 2.77 cr | ₹456.40 |

- மேலும் இந்த காலகட்டத்தில் வருவாயில் மொத்த பங்களிப்பில் நாட்டின் 5வது மாநிலமாக உள்ளது.
- நாட்டின் புவியமைப்பில் வெறும் 2 சதவிகிதம் கொண்ட சிறிய மாநிலமாக இருந்த போதிலும் GST-ஆட்சிமுறையின் முதல் நிதி ஆண்டில் அதிக தனிநபர் வருவாய் வசூலில் முதலாவது இடத்தினை ஹரியானா அடைந்துள்ளது.
- கடந்த ஆண்டு ஜூலை 1-லிருந்து நாடு முழுவதும் GST அமல்படுத்தப்பட்டது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## HSBC இந்தியா தலைவர் – அமிதாப் மல்ஹோத்ரா

- ஹாங்காங் மற்றும் ஷாங்காய் வங்கி நிறுவனம் (HSBC – Hongkong and Shanghai Banking Corporation Limited), அமிதாப் மல்ஹோத்ராவினை HSBC இந்தியாவின் முதலீட்டு வங்கியின் தலைவராக நியமித்துள்ளது.
- அமிதாப், முதலீட்டு வங்கி மற்றும் மூலதன பங்குச் சந்தை வணிகம் (Equity Capital Markets - ECM) ஆகியவற்றிற்கு தலைமை வகிப்பார்.



- அமிதாப்பின் பரிவர்த்தனை அனுபவம் சீனா, இந்தோனேசியா மற்றும் வியட்நாம் ஆகிய சந்தைகள் வரை நீள்கிறது.

## உலக வங்கியின் உள்நாட்டு விருது - ICZM

- இந்தியாவின் ஒருங்கிணைந்த கடலோரப் பகுதி மேலாண்மை (Integrated Coastral Zone Management – ICZM) திட்டம், பல மேம்பாட்டுக் குறிக்கோள்களை சாதித்துக் காட்டிய அபூர்வமான செயல்திறனுக்காக உலக வங்கியின் உள்நாட்டு விருதினை வென்றுள்ளது.
- தெற்கு ஆசிய நாடுகளில் உள்ள உலக வங்கியின் பணிக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட 42 இறுதித் திட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 8 விருது பெற்ற திட்டங்களில் ICZM திட்டம் ஒன்றாகும்.

***ICZM***

- ஒருங்கிணைந்த கடலோரப் பகுதி மேலாண்மைத் திட்டம், நாட்டில் விரிவான கடலோர மேலாண்மை அணுகுமுறையினை செயல்படுத்துவதற்கான தேசிய திறனை கட்டமைப்பதனை நோக்கமாகக் கொண்ட உலக வங்கியின் ஆதரவு பெற்ற திட்டம் ஆகும்.
- சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மை சமூகத்தினை (Society of integrated Coastal Management – SICOM) அமைப்பதன் மூலம் ICZM திட்டத்தினைத் தொடங்கியது.
- இத்திட்டத்தின் கீழ், SICOM 4 கூறுகளை செயல்படுத்துகிறது. அவை,
    - தேசிய கடலோர மேலாண்மை திட்டம்
    - ICZM – மேற்கு வங்காளம்
    - ICZM – ஒரிசா
    - ICZM – குஜராத்

# விளையாட்டுச் செய்திகள்

## சர்வதேச ஒருநாள் (ODI) கிரிக்கெட்டில் 10,000 ரன்கள் – தோனி

- லார்ட்ஸ் மைதானத்தில் இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியின்போது இந்தியாவின் முன்னாள் கேப்டன் எம்.எஸ்.தோனி 10,000 ரன்களைக் கடந்து சாதனை புரிந்துள்ளார்.




| | Mats | Runs | Avg |
|---|---|---|---|
| Sachin Tendulkar | 463 | 18426 | 44.83 |
| Sourav Ganguly | 311 | 11363 | 41.02 |
| Rahul Dravid | 344 | 10889 | 39.17 |
| MS Dhoni | 320 | 10004 | 51.30 |

- சச்சின் டெண்டுல்கர், சவ்ரவ் கங்குலி மற்றும் ராகுல் டிராவிட் ஆகியோருக்கு அடுத்து இச்சாதனையை புரிந்த நான்காவது இந்திய பேட்ஸ்மேன் தோனி ஆவார்.
- சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் (Oneday International) 10,000 ரன்களை எடுத்த இரண்டாவது விக்கெட் கீப்பர் தோனி ஆவார்.
- மற்றொரு விக்கெட் கீப்பர் ஸ்ரீலங்காவின் குமார் சங்ககாரா ஆவார்.
- சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 300 கேட்சுகளைப் பிடித்த முதல் இந்திய விக்கெட் கீப்பர் என்பது தோனி நிகழ்த்திய மற்றொரு சாதனையாகும்.
- ஆடம் கில்கிறிஸ்ட், மார்க் பவுச்சர் மற்றும் குமார் சங்ககாரா ஆகியோருக்கு அடுத்து உச்ச நிலையை எட்டும் நான்காவது விக்கெட் கீப்பர் தோனி ஆவார்.

## கோல்டன் க்ளவ் ஆப் வோஜ்வோதினா இளைஞர் போட்டிகள்

- 36 வது கோல்டன் கோல் ஆப் வோஜ்வோதினா இளைஞர் போட்டியில் இந்திய குத்துச் சண்டை வீரர்கள் பதக்கம் வென்று முத்திரை பதித்துள்ளனர்.
- செர்பியாவின் சுபோடிக்காவில் நடைபெற்ற போட்டியில் இந்திய குத்துச் சண்டை வீரர்கள் ஏழு தங்கப் பதக்கங்களை வென்று முன்னிலை இடத்தைப் பெற்றுள்ளனர்.



- இந்தியா 17 பதக்கங்களுடன் முன்னிலையைப் பெற்றுள்ளது. இந்தப் 17 பதக்கங்களில்

6 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 4 வெண்கலப் பதக்கங்களும் அடங்கும்.

- ரஷ்யா 11 பதக்கங்களை (3 தங்கம், 2 வெள்ளி மற்றும் 6 வெண்கலம்) வென்றுள்ளது. ஆனால் கஜகஸ்தானுக்கு அடுத்த நிலையில் மூன்றாவது இடத்தில் உள்ளது. கஜகஸ்தான் 5 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது. கஜகஸ்தான் ஒட்டுமொத்தமாக 7 பதக்கங்களை வென்றுள்ளது.
- அமன் (91 கிலோ), ஆகாஷ் குமார் (56 கிலோ), எஸ் பரூன் சிங் (49 கிலோ), விஜய் தீப் (69 கிலோ), நீது (48 கிலோ), திவ்யா பாவார் (4 கிலோ) மற்றும் லலிதா (64 கிலோ) ஆகியோர் தங்கப் பதக்கங்களை வென்ற இந்திய வீரர்கள் ஆவர்.

## உலக ஜூனியர் வுசூ சாம்பியன்ஷிப்

- பிரேசிலில் நடைபெற்ற 7 வது உலக ஜூனியர் வுசூ சாம்பியன்ஷிப்பில் இந்திய அணி 4 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 5 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.
- வுசூ என்பது குத்துச் சண்டை விளையாட்டைப் போன்ற தடுப்பு விளையாட்டு ஆகும்.



- சான்ஷீ பிரிவில் பப்ளு (42 கிலோ சப் ஜூனியர்), சலீம் (56 கிலோ சப் ஜூனியர்), சவிதா (48 கிலோ சப் ஜூனியர்) மற்றும் ரோகித் (180 கிலோ ஜூனியர்) ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளனர்.
- ஹிமான்ஷீ (56 கிலோ ஜூனியர்), ஸ்ருதி (60 கிலோ ஜூனியர்) மற்றும் ஜன்வி (52 கிலோ ஜூனியர்) ஆகியோர் வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.
- டைஜிஜியான் நகரில் நடைபெற்ற ஆண்களுக்கான தவுலு அல்லது சீனாவின் குங் பு விளையாட்டில் கர்னஜீத் சர்மா ஹன்ஜபம் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

- - - - - - - - - - - - - - -